Koviloor Digital Library

श्री मीनाक्षी पञ्चरत्नम्

ஸ்ரீ சங்கர பகவத்பாதர்
அருளிய

மீனாக்ஷி பஞ்சரத்னம்

உரையாசிரியர்
இரா. சுப்பிரமணியன்



Acc. No. 4287

2134/2

ஜோதி நிலயம்

Koviloor Digital Library

श्री।

Koviloor Digital Library

श्री शङ्कराचार्य विरचितं

श्री मीनाक्षी पञ्चरत्नम्

ஸ்ரீ சங்கர பகவத்பாதர் அருளிய

ஸ்ரீ மீனாக்ஷி பஞ்சரத்னம்

[தேவநாகரி தமிழ் லிபிகளில் ஸம்ஸ்கிருத மூலமும், தமிழ் பொழிப்புரையும் கருத்துரையும்.]



இரா. சுப்பிரமணியன்

பாமதி நூல்கள் 3] [விலை 20 பைசா

ஜோதி நிலையம்

சென்னை-18.

Koviloor Digital Library

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு

ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் ஸ்ரீமடம், காஞ்சீபுரம்

ஸ்ரீ:

முகாம் திருமலை திருப்பதி தேதி 24-6-66

'ஜோதி ப்ரசுரம்' என்னும் தலைப்புடன் நூல்களை வெளியிடும் ஸ்ரீ ஜயராமன் ப்ராசீன மஹான்கள் அனுக்ரஹித்துள்ள ஸ்தோத்ரங்களை பல அறிஞர்களைக் கொண்டு எழுதப்படும் தமிழ் உரையுடன் வெளியிட முன்வந்திருப்பதையும் முதலில் ஸ்ரீ பகவத் பாதாசார்யாள் ஒரு ஏழைப் பெண்மணிக்காக அருளியுள்ள லக்ஷ்மீஸ்தோத்ர ரூபமான கனகதாரா ஸ்தோத்ரத்தை சென்னை ஸர்வகலாசாலை ஸம்ஸ்கிருத பேராசிரியர் கவிகோகில ஸ்ரீ ராகவன் இயற்றியுள்ள தமிழ் உரையுடன் ப்ரசுரிக்க இருப்பதையும் அறிந்து ஸ்ரீமஹா ஸந்நிதானத்தில் ஸந்தோஷிக்கிறார்கள்.

ஸ்ரீ ஜயராமனின் இம்முயற்சி பக்தர்களின் ஆதரவினால் மேன்மேலும் வளர்ச்சி யடையுமாறு ஸ்ரீ மஹா ஸந்நிதானத்தில் அனுக்ரஹிக்கிறார்கள்

ஆக்ஞைப்படி

எஸ். சாம்பமூர்த்தி சாஸ்திரி

மானேஜர்.

ஸ்ரீ

Koviloor Digital Library

ஆசார்யரவர்களின் அருள் வாக்கு:

ஸ்ரீ மீனாக்ஷியின் கடாக்ஷம்

मधुरापुरनायिके नमस्ते मधुरालापसुखाभिरामहस्ते
मलयध्वजपाण्डयराजकन्ये मयीमीनाक्षिकृपां विधेहि धन्ये

அம்பாளுக்கு ஆயிரம் நாமங்கள் இருக்கின்றன. ஆயிரம் பெயர்கள் இருக்கின்றன. அதற்கு ஸஹஸ்ர நாமம் என்று பெயர். அம்பாளுடைய ஸஹஸ்ர நாமத்தில் ஒரு நாமம், 'மீனலோசனு' என்பது.

वक्त्रलक्ष्मीपरीवाहचलन् मीनाभलोचना

அம்பாளுடைய முககாந்தி ஒரு பெரிய பிரவாகம். இந்தப் பிரவாகத்திலே துள்ளுகிறது அம்பாளுடைய நேத்திரமாகிய மீன். ஸஹஸ்ர நாமத்திலே மீனுக்ஷியை ஸூசனை பண்ணியிருக்கிறது.

தேவியின் இலக்கியங்களில் ஸஹஸ்ர நாமம் எப்படியோ அப்படியே ஆதிசங்கராசார்யார் செய்த ஸௌந்தர்ய லஹரியும். இந்த ஸௌந்தர்ய லஹரி யிலும் மீனுக்ஷியினுடைய ஸூசனை இருக்கிறது,

तवापर्णे कर्णेजपनयनपैशुन्यचकिताः
निलीयन्ते तोये नियतमनिमेषाः शफरिकाः ।

சபரம் என்ருல் மீன். சபரிகா :என்ருல் பெண் மீன். அபர்ணு என்ருல் அம்பிகைக்குப் பெயர். இந்த ச்லோகத்தினுல் ஆதி சங்கராசார்யர்கள், அம்பிகை யைப் பார்த்து "ஹே அபர்ணே! அம்பிகே! உன் கண்களைப் போல உள்ளன மீன்கள். மீன்களுக்கும்

Koviloor Digital Library

உன் கண்களைப் பார்த்து அசூயை ஏற்பட்டுள்ளது" என்கிருர்

சாஞ்சல்யமும் மீன்களுடைய சுபாவமும், நமக்கு அதிகமா, அம்பிகையின் கண்களுக்கு அதிகமா என்று ஆசூயை ஏற்படும் போலிருக்கிறது. அந்த ஆசூயையில் தாம் தோல்வியடைய வேண்டியதே என்று மீன்களெல்லாம் பயந்து தோல்வியடைந்தவர்கள் எப்படித் தண்ணீரில் புகுந்து கொள்ளுவார்களோ. அது போன்று மீன்களெல்லாம் தண்ணீருக்குள் புகுந்து கொண்டு விட்டன. மீன்களெல்லாம் ஏன் தண்ணீரில் போய் புகுந்து கொண்டிருக்கின்றன. அம்பாளுடைய நேத்திரத்திஞலே ஜெயிக்கப்பட்டுப் போனதிஞலே. இதஞல் அம்பாளுடைய நேத்திரங்கள் மீன்களுக்கு ஒப்பாக இருக்கின்றன என்பதைக் காட்டுவதற்காக 'தவாபர்ணே கர்ணே ஜப நயன பை சுன்ய சகிதா:' என்கிருர்.

மீனைவிட அழகான நேத்திரத்தை உடையவள் என்ற பொருளை ஸௌந்தர்ய லஹரியில் ஆதிசங்கராசார்யார் தெரிவித்திருக்கிருர்கள். ஆகையால் மீஞக்ஷி என்று அம்பிகைக்கு உள்ள ஓர் அவசரத்தை ஸஹஸ்ர நாமம், ஸௌந்தர்ய லஹரி இவை இரண்டும் அறிவிக்கின்றன.

ஆடு, மாடு, மனிதர்கள் இந்த இனங்களெல்லாம் குட்டிகளை, குழந்தைகளை பால் கொடுத்து வளர்க்கின்றன. பக்ஷிகள் எல்லாம் முட்டையிட்ட பிறகு அடைகாத்து வளர்க்கின்றன. ஜலத்தில் சஞ்சரிக்கும் மீன்களோ தம்முடைய கண்களால் பார்த்து குட்டிகளை வளர்க்கின்றன என்று கவிகள் சொல்வது வழக்கம்.

Koviloor Digital Library

அந்த முறையில் தன்குழந்தைகளை எல்லாம் கடாக்ஷத்தினால் வளர்க்கும் ஜாதி மீன்ஜாதி மீனைப் போலுள்ள நேத்திரத்தை அம்பாள் உடையவளாக இருக்கின்றாள் என்றால், உருவத்தில் மீனைப்போல் இருப்பது மட்டுமல்ல, குணத்திலும் மீனைப் போலுள்ள கடாக்ஷம் அம்பாளிடம் இருக்கிறது. உலகத்திலுள்ள சகல மக்களையும் எல்லாக் குழந்தைகளையும் தன்னுடைய கடாக்ஷமாத்திரத்தினாலேயே ரக்ஷிக்கிறவள் அம்பாள் என்னும் பொருளைத் தெரிவிப்பதற்காகத் தான் மதுரையில் வீற்றிருக்கும் அம்பிகைக்கு மீனாக்ஷி என்று பெயர் வந்தது.

கடாக்ஷம் மதுரமாக இருப்பதால், இந்த நகரமே மதுரமாம். அதில் பரம மதுரமாக இருக்கும் கடாக்ஷத்தினால் உலகிலுள்ள சகல மக்களையும், ஜீவராசிகளையும் தன்னுடைய கடாக்ஷ அமிர்தத்தால், பார்வையின் அமுதத்தால், நனைவித்து எல்லாப் பிராணிகளும் எல்லா ஜீவன்களும் உய்யுமாறு செய்து கொண்டே இருப்பாள்.

இவளுக்கு நாம் எல்லோரும் சேர்ந்து நமது உள்ளப் பிரவாகத்தில் இருக்கும் கும்பத்தினால் பக்தி என்ற தீர்த்தத்தை அபிஷேகம் பண்ணி இந்தக் கும்பாபிஷேகம் ஒவ்வொரு சுகிர்தத்தையும் அளித்து உலகம் முழுக்க இவளுடைய கடாக்ஷ அமிர்தத்தினாலே பூர்ணமாக இருக்கும்படியாக அம்பிகையின் சரணாரவிந்தத்தில் நாம் பிரார்த்திக்கின்றோம்.

[28—6—63 மதுரை மீனாக்ஷி அம்மன் கும்பாபிஷேகத்தின்போது ஆசார்யாவர்கள் அனுக்ரகித்த அருள்வாக்கு.]

Koviloor Digital Library

ஸ்ரீ:

ஸ்ரீ மீனாக்ஷி பஞ்சரத்னம்

முன்னுரை

பாரதநாடு பெரும் புண்ணிய பூமி. இந்நாட்டில் பிறந்தவர்கள் எல்லோரும் தேவர்களுக்கு நிகராவார்கள். தேவர்கள் தங்களுக்கு முன்பாகச் சிவனையும், கடைசியில் திருமாலையும் கொண்டு விளங்குவதாக வேதம் கூறுகிறது. வேதத்தின் விளக்கம் போலவே இந்தியாவின் வடபகுதியில் திருமால் ஸ்ரீராமனாகவும் ஸ்ரீகிருஷ்ணனாகவும் அவதரித்து பாரதத்தைப் பாதுகாத்தார். தென்திசையில் ஸ்ரீபரமேசுவரன் சுந்தரேசனாகவந்து பாண்டிய ராஜகுமாரியான ஸ்ரீமீனாக்ஷியைத் திருமணம் செய்துக் கொண்டு அரசாட்சி நடத்தினார். அதுமட்டுமல்ல, ஜகஜ்ஜனனியான ஸ்ரீபராசக்தியும் அங்கயற்கண்ணம்மையாக வந்து செங்கோல் செலுத்தியதும் தென்நாடே. இத்தகு மாண்புடைய தென்நாட்டின் திலகமாய்த்திகழ்வது மதுரையம்பதி. இத்தொன் நகரை ஸ்ரீஆதிசங்கர பகவத் பாதர்கள் தமது விஜய யாத்திரையில் சென்றடைந்து, அவ்வூரில் கோயில் கொண்டு விளங்கும் ஸ்ரீமீனாக்ஷியைத் துதித்ததாகிய ஸ்தோத்ர ரத்னமே "ஸ்ரீமீனாக்ஷி பஞ்சரத்னம்". ஐந்து ரத்தினங்களைப்போல் விளங்கும் ஐந்து ஸ்தோத்திரங்களுக்கும் தமிழில் உரையளிக்கப் படுகிறது

Koviloor Digital Library
42287
Q25

श्रीः

கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

श्री मीनाक्षी पञ्चरत्नम्

उद्यद्भानु सहस्रकोटि सदृशां केयूरहारोज्वलां
बिम्बोष्ठीं स्मितदन्तपङ्क्तिरुचिरां पीताम्बरालङ्कृताम् ।
विष्णुब्रह्म सुरेन्द्रसेवितपदां तत्वस्वरूपां शिवां
मीनाक्षीं प्रणतोऽस्मि सन्ततमहं कारुण्यवारांनिधिम् ॥

உத்3யத்3பா4னு ஸஹஸ்ரகோடி ஸத்3ருசாம் கேயூரஹாரோஜ்வலாம்
பி3ம்போ3ஷ்டீ2ம் ஸ்மித த3ந்தபங்திருசிராம் பீதாம்ப3ராலங்க்ருதாம் |
விஷ்ணுப்3ரம்ம ஸுரேந்த்3ர ஸேவிதபதா3ம் தத்வஸ்வரூபாம் சிவாம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்ய வாராம் நிதி4ம்

பதவுரை :—उद्यद्भानु सहस्रकोटि सदृशां, உத்3யத்3 பா4னு ஸஹஸ்ர கோடி ஸத்3ருசாம்—உதிக்கின்ற ஆயிரம் கோடி சூரியர்களைப்போன்ற பேரொளியுடையவளும், केयूरहारोज्वलां கேயூர ஹாரோஜ்வலாம்—தோள்வளை, மார்பணி முதலியவைகளோடு விளங்குபவளும், बिम्बोष्ठीं பி3ம்போ3ஷ்டீ2ம் — கோவைப் பழத்தைப் போன்ற சிவந்த உதடுகளை உடையவளும், स्मितदन्तपङ्क्तिरुचिरां ஸ்மித த3ந்த பங்திருசிராம்—புந்நகையினுல் சிறிது வெளியில் தெரியும் பற்களின் ஒளியுடன் விளங்குபவளும், पीताम्बरालङ्कृतां பீதாம்ப3ராலங்க்ருதாம்

Koviloor Digital Library

—பொன்னுடையினால் அலங்கரிக்கப்பட்டவளும், विष्णु ब्रह्म सुरेन्द्र सेवित पदां விஷ்ணு ப்ரம்ம ஸுரேந்த்[3]ரஸேவித பத[3]ாம்—திருமால் நான்முகன் வானவர்கோன் இவர்களால் வணங்கப்பட்ட திருவடியையுடையவளும், तत्त्वस्वरूपां தத்வஸ்வரூபாம்—தத்துவங்களின் உருவாய் விளங்குபவளும், शिवां சிவாம் — மங்களஸ்வரூபியும் कारुण्य वारां निधिं காருண்யவாராம் நிதி[4]ம்—கருணைக்கடலானவளுமான, मीनाक्षीं மீனாக்ஷீம்—மீனாக்ஷியை, अहं அஹம்—நான், सन्ततं ஸந்ததம்—எப்பொழுதும், प्रणतोऽस्मि ப்ரணதோஸ்மி—வணங்குகிறேன்.

பொழிப்புரை: உதயமாகும் ஆயிரம் கோடி சூரியர்களைப்போன்ற காந்தியை உடையவளும், தோள்வளை, மார்பணிகளோடு விளங்குபவளும், கோவைப் பழம் போன்ற உதடுகளையுடையவளும், புன்னகையினால் சிறிது வெளியில் தெரியும் பற்களின் ஒளியுடன் விளங்குபவளும், பொன்னுடையணிந்தவளும், திருமால், நான்முகன், வானவர்கோன் இவர்களால் வணங்கப்பட்ட திருவடிகளையுடையவளும், தத்துவங்களின் வடிவானவளும், மங்களையும், கருணைக் கடலானவளுமான ஸ்ரீ மீனாக்ஷியை நான் தினமும் வணங்குகிறேன்.

விளக்க உரை: இந்த ஸ்தோத்திரத்தில் "உத்[3]யத்[3] ப[4]ானு ஸஹஸ்ரகோடி ஸத்[3]ருசாம்" என்பது முதல் "விஷ்ணுப்[3]ரம்ம ஸுரேந்த்[3]ரஸேவிதபத[3]ாம்" என்பது வரைக்கும் அம்பாளின் ஸகுணஸ்வரூப வர்ணனையும், "ஸ்ரீ மஹாராக்ஞி" யாகும் தன்மையையும் விளக்கி விட்டு, "தத்வஸ்வரூபாம் சிவாம்" என்பவைகளால் நிர்குணசிவ சொரூபமாக இருப்பவளும் பராசக்தியே என்பதையும் கூறி அத்தகைய மீனாக்ஷியை வணங்குகிறேன் என்று முடிக்கிறார்.

Koviloor Digital Library

मुक्ताहारलसत्किरीटरुचिरां पूर्णेन्दु वक्त्रप्रभां
शिञ्चिन्नूपुर किङ्किणीमणिधरां पद्मप्रभाभासुराम् ।
सर्वाभीष्टफलप्रदां गिरिसुतां वाणीरमासेवितां
मीनाक्षींप्रणतोऽस्मि सन्ततमहं कारुण्यवारांनिधिम् ॥

முக்தாஹாரலஸத்கிரீட ருசிராம் பூர்ணேந்து வக்த்ரப்ரபாம்
சிஞ்சின்நூபுர கிங்கிணீமணிதராம் பத்மப்ரபா பாஸுராம் ।
ஸர்வாபீஷ்ட பலப்ரதாம் கிரிஸுதாம் வாணீரமாஸேவிதாம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்தத மஹம் காருண்ய வாராம் நிதிம் ॥

பதவுரை: मुक्ताहार लसत्किरीटरुचिरां முக்தாஹார லஸத்கிரீட ருசிராம்—முத்து மாலைகளோடு விளங்குகின்ற கிரீடத்தின் ஒளியோடு பிரகாசிப்பவளும், पूर्णेन्दु वक्त्रप्रभां பூர்ணேந்து வக்த்ரப்ர[4]பாம் — முழு நிலவு போன்ற முகத்துடன் ஒளிர்பவளும், शिञ्चिन्नूपुर किङ्किणीमणिधरां—சிஞ்சிந் நூபுர கிங்கிணீ மணித[4]ராம்—ஒலிக்கின்ற ஒட்டியாணம், கிங்கிணீ சிலம்பு முதலான பல மணிகளைத் தரித்தவளும், पद्मप्रभा भासुरां பத்[3]மப்ரப[4]ா ப[4]ாஸுராம்—தாமரை போன்று செவ்வொளியால் பிரகாசிப்பவளும், सर्वाभीष्टफलप्रदां ஸர்வாபீ[4]ஷ்டப[2]லப்ரத[3]ாம்—அன்பர்கள் விரும்பிய எல்லாப் பயன்களையும் அளிப்பவளும், गिरिसुतां கி[3]ரிஸுதாம் — மலைமகளும், वाणीरमासेवितां வாணீரமாஸேவிதாம்—ஸரசுவதி, லக்ஷ்மீ இவர்களால் ஸேவிக்கப் பட்டவளும், कारुण्यवारांनिधिं காருண்ய வாராம் நிதிம்—கருணைக்கடலானவளுமான,

கோவிலூர் ஆதீனம் கோவிலூர்-630307

Koviloor Digital Library

मीनाक्षीं மீனுக்ஷீம் — மீனுக்ஷீதேவியை, अहं அஹம்— நான், सन्ततं ஸந்ததம்—என்றும், प्रणतोऽस्मि ப்ரண தோஸ்மி— வணங்குகிறேன்.

பொழிப்புரை:—முத்துமாலைகளோடு விளங்கும் கிரீடத்தின் ஒளியோடு பிரகாசிப்பவளும், முழுநில வன்ன முகத்தினளும், ஒலிக்கின்ற ஒட்டியாணம் கிங்கிணீ சிலம்பு முதலான பல மணிகளைத் தரித்தவளும், தாமரை போன்ற செவ்வொளியால் பிரகாசிப்பவளும், பக்தர்கள் விரும்பிய எல்லா பலன்களையும் அளிப்பவளும், சரசுவதி, லக்ஷ்மி இவர்களால் வணங்கப்பட்டவளும், கருணைக்கடலானவளுமான ஸ்ரீமீனுக்ஷீ தேவியை நான் எப்பொழுதும் வணங்குகிறேன்.

श्रीविद्यां शिववाम भागनिलयां हीङ्कारमन्त्रोज्वलां
श्रीचक्राङ्कितबिन्दुमध्यवसतीं श्रीमत्सभानायकीम् ।
श्रीमत्षण्मुख विघ्नराजजननीं श्रीमज्जगन्मोहिनीं
मीनाक्षीं प्रणतोऽस्मि सन्ततमहं कारुण्यवारां निधिम् ॥

ஸ்ரீவித்[3]யாம் சிவவாம பா[4]க[3]நிலயாம் ஹ்ரீங்காரமந்த் ரோஜ்வலாம்
ஸ்ரீசக்ராங்கித பி[3]ந்து[3] மத்[4]யவஸதீம் ஸ்ரீமத்ஸபா[4] நாயகீம் |
ஸ்ரீமத் ஷண்முக[2] விக்[4]னராஜ ஜனனீம் ஸ்ரீமஜ்ஜக[3]ன்மோஹினீம்
மீனுக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்ய வாராம் நிதி[4]ம் ||

பதவுரை : श्रीविद्यां ஸ்ரீ வித்[3]யாம் — ஸ்ரீ வித்யா சொரூபிணியும், शिववामभागनिलयां சிவவாமப[4]ாக[3] நில

Koviloor Digital Library

யாம்—ஸ்ரீ பரமேஸ்வரனின் இடது பாகத்தில் நிலைத் திருப்பவளும், ह्रींकारमन्त्रोज्ज्वलां ஹ்ரீங்கார மந்த்ரோ ஜ்வலாம்—ஹ்ரீங்காரமெனும் மந்திரத்துள் பிரகாசிப்ப வளும் श्रीचक्राङ्कित बिन्दु मध्यवसतीं ஸ்ரீ சக்ராங்கித பி[3] ந்து[3] மத்[4]ய வஸதீம்—ஸ்ரீ சக்கிரத்தின் நடுவிலிருக்கும் பிந்துஸ்தானத்தில் வஸிப்பவளும், श्रीमत्सभानायकीं ஸ்ரீமத் ஸபாநாயகீம்–ஸ்ரீ சுந்தரேசனின் அவைக் கண் அமரும் பட்டத்தரசியும் அல்லது, வெள்ளியம் பலத்துள் நடமிடும் சபாநாயகனின் சபைக்குத் தலைவி யும், श्रीमत्षण्मुख विघ्नराज जननीं ஸ்ரீமத் ஷண்முக[2] விக்[4]ன ராஜ ஜனனீம்—அணிமாத்யஷ்ட ஐஸ்வர்யத்தோடு கூடிய ஷண்முகன், மஹாகணபதி இவர்களின் பரிவு மிக்க அன்னையும், श्रीमज्जगन्मोहिनीं ஸ்ரீ மஜ்ஜக[3]ன் மோஹி னீம்—உலகை மோஹிக்கச் செய்பவளும், कारुण्यवारांनिधिं காருண்ய வாராம் நிதி[4]ம் — கருணைக்கடலானவளு மான मीनाक्षीं மீனுக்ஷீம்—மீனுக்ஷியை सन्ततं ஸந்ததம்— எப்பொழுதும், अहं அஹம்—நான், प्रणतोऽस्मि ப்ரண தோஸ்மி—வணங்குகிறேன்.

பொழிப்புரை : ஸ்ரீ வித்யா சொரூபிணியும், பரமேசுவர னின் வாமபாகத்தில் நிலைத்திருப்பவளும், ஹ்ரீங்காரமென் னும் மந்திரத்துள் பிரகாசிப்பவளும், ஸ்ரீ சக்கிரத்தின் நடு வில் விளங்கும் பிந்துவில் வஸிப்பவளும், ஸ்ரீ சுந்தரபாண்டி யனுகும் இறைவனின் ராஜ சபைக்குத் தலைவியும், ஆறு முகன் ஆனைமுகன் இவர்களின் அன்னையும், உலகை மயக்குபவளும், கருணைக் கடலானவளுமான ஸ்ரீமீனுக்ஷியை நான் என்றும் வணங்குகிறேன்.

விளக்கவுரை : ஸ்ரீ வித்யை யென்பது சோபனதமமான உபாஸனை. மோக்ஷத்தை அளிக்கக் கூடிய வித்யை. "மோகைக்ஷக ஹேது வித்[3]யாஸா ஸ்ரீவித்[3]யைவ நஸம்சய:''

Koviloor Digital Library

என்று லலிதாத்ரிசதியில் வருகிறது. ஸ்ரீ வித்யையென்பது அம்பாளின் மந்திரமான ஸ்ரீமத் பஞ்சதசாக்ஷரிக்குப் பெயர். அம்பாளுக்கே ஸ்ரீவித்யையென்று பெயர் என்பதை பஹ்விருசோபநிஷத் கூறுகிறது.

பிரணவம் எவ்விதம் உபயப்ரம்மோபாஸனைக்கு ஸாதனமாகிறதோ, அதே போல ஹ்ரீங்காரமும் உபயப்ரம்மோபாஸனைக்குக் காரணமாகிறது. ஆகவே ஹ்ரீங்காரம் சக்தி ப்ரணவம் என்று ஆதி ஆசாரியாள் ஸ்ரீ லலிதாத்ரிசதி பாஷ்யத்தில் கூறி இருக்கிறார்கள்.

"ஸ்ரீ சக்ராங்கித பிந்து[3]மத்[4]யவஸதீம்": ஸ்ரீ சக்ரம் இருவகையான தாத்பரியங்ளோடு கூடியது. அம்பாளை ஸகுணப்ரம்மமாக நாம் உபாஸிக்கும் பொழுது அப்பராசக்தி பிரகாசிக்கும் லோகமாக அதாவது ஸ்ரீபுரமாக விளங்குகிறது. நிர்குணப்ரம்மமாகக் காணும் பொழுது ஆத்ம சாதனையின் ஆரம்ப நிலையான சிரவணம் முதலாக முடிந்த நிலையான ஜீவப்ரமைக்கியம் வரை விளக்கும் ஸாதனரூபமே ஸ்ரீசக்ரமாக விளங்குகிறது. இங்கு முதலில் கூறியதை லலிதோபாக்கியானமும், பின்னதை சிவத்ருஷ்டியும் கூறியிருக்கிறது. தந்திரங்களில் சிவசக்திகளின் ஐக்கிய சொரூபம் ஸ்ரீ சக்கிரமென்றும், பிரபஞ்சமே ஸ்ரீ சக்கிரமென்றும், கூறப்படுகிறது. இந்த ஸ்ரீ சக்கிரமே ச்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்று முப்பிரிவுபடும் இச்சக்கிரத்துள் ஒன்பது ஆவரணங்கள் இருக்கின்றன. நூற்றுப் பத்து சக்தி யோகினிகள் இருக்கிறார்கள். அம்பாளை உபாஸிக்கப் பயன்படும் பிரதீகம். இதற்கு தமிழில் "நாற்பத்து முக்கோணம்" என்று பெயர்.

Koviloor Digital Library

श्रीमत्सुन्दरनायकीं भयहरां ज्ञानप्रदां निर्मलां
श्यामाभां कमलासनार्चितपदां नारायणस्यानुजाम् ।
वीणावेणु मृतङ्ग वाद्य रसिकां नानाविधामम्बिकां
मीनाक्षीं प्रणतोऽस्मिसन्ततमहं कारुण्यवारां निधिम् ॥

ஸ்ரீமத்ஸுந்த[3]ரநாயகீம் ப[4]யஹராம் ஞானப்ரத[3]ாம நிர்மலாம்
ச்யாமாப[4]ாம் கமலாஸனர்ச்சிதபத[3]ாம் நாராயணஸ்யானுஜாம்।
வீணவேணு மிருதங்க[3] வாத்[3]ய ரஸிகாம் நாநாவித[4]ாமம்பி[3]காம்
மீனுக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்தத மஹம் காருண்ய
வாராம் நித[4]ிம் ॥

பதவுரை :—श्रीमत्सुन्दरनायकीं ஸ்ரீமத்ஸுந்த[3]ர நாய கீம் — ஸ்ரீஸுந்தரேசனின் மஹிஷியும் அல்லது பேரழகுபொருந்திய தலைவியும், भयहरां ப[4]யஹராம்— (அடியார்களின்) பயத்தை விலக்குபவளும், ज्ञानप्रदां ஞானப்ரத[3]ாம்—ஞானத்தை யளிப்பவளும், निर्मलां நிர்மலாம் - மலமற்றவளும், श्यामाभां சியாமாப[4]ாம் — சியாமவர் ணத்துடன் பிரகாசிப்பவளும், कमलासनार्चितपदां கமலாஸ ஞர்ச்சிதபத[3]ாம்—தாமரை மலரில் வீற்றிருக்கும் நான் முகனுல் அர்ச்சிக்கப்பட்ட பாதத்தை உடையவளும், नारायणस्यानुजाम् நாரயணஸ்யானுஜாம்—நாராயணனின் உடன்பிறந்தவளும், वीणावेणु मृदङ्ग वाद्यरसिकां வீண வேணு மிருத[3]ங்க[3] வாத்[3]யரஸிகாம்—வீணை, புல்லாங்

Koviloor Digital Library

குழல், மிருதங்கம் முதலான வாத்யங்களின் இசையை ரஸிப்பவளும், 𑌨𑌾𑌨𑌾𑌵𑌿𑌧𑌾𑌮𑌮𑍍𑌬𑌿𑌕𑌾𑌂 நாநாவித^{4}ா மம்பி^{3}காம்–பலவகை விளையாட்டில் விருப்பமுள்ளவளும், 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌵𑌾𑌰𑌾𑌂𑌨𑌿𑌧𑌿𑌂 காருண்ய வாராம் நிதி^{4}ம் — கருணைக் கடலான வளுமான, 𑌮𑍀𑌨𑌾𑌕𑍍𑌷𑍀𑌂 மீனாக்ஷீம்—மீனாக்ஷியை 𑌅𑌹𑌂 அஹம்–நான் 𑌸𑌨𑍍𑌤𑌤𑌂 ஸந்ததம்—எப்பொழுதும், 𑌪𑍍𑌰𑌣𑌤𑍋𑌸𑍍𑌮𑌿 ப்ரண தோஸ்மி—வணங்குகிறேன்.

பொழிப்புரை : ஸ்ரீ ஸுந்தரேசனின் நாயகியும், அடியார்களின் பயத்தைப் போக்குபவளும் மெய்ஞானத்தை நல்குபவளும், மலமற்றவளும், சியாமையும், தாமரை மலரிலிருக்கும் நான்முகனால் வழிபடப்பட்ட திருவடியையுடையவளும், திருமாலின் சோதரியும், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் முதலான இசைக் கருவிகளின் இசையை ரஸிப்பவளும், பலவகை விளையாட்டில் விருப்பமுள்ளவளும், கருணைக்கடலானவளுமான ஸ்ரீ மீனாக்ஷியை வணங்குகிறேன்.

விளக்கவுரை : "ஸ்ரீ வித்யாம்" என்ற முன் சுலோகத்திலும், "ஸ்ரீமத் ஸுந்தர நாயகீம்" என்ற இந்த சுலோகத்திலுமாக ஸ்ரீமத் ஆசாரியாள் ஸ்ரீ வித்யா ஸம்ப்ரதாயத்தில் உபாஸிக்கப்படும் முக்ய சக்திகளையெல்லாம் ஸ்ரீ மீனாக்ஷியின் சொரூபமாக ஸ்தோத்ரம் செய்திருக்கிறார்கள். ஸ்ரீ வித்யாம் என்ற முன் சுலோகம் முழுமையும் ஸ்ரீமத் ராஜராஜேஸ்வரியையும், ச்யாமாபாம் என்பதனால் ராஜமாதங்கியையும், நாராயணஸ்யானுஜாம் என்பதனால் வைஷ்ணவீ சக்தியான வாராஹியையும், ஞானப்ரதாம் என்பதனால் அன்னபூர்ணேசுவரியையும், நாநாவிதாமம்பிகாம் என்பதனால் பாலாபரமேசுவரியையும் கூறியிருப்பதை ஊகித்துணர்ந்து கொள்ள வேண்டும். மேலும் ஸ்ரீமத் ஸுந்தர நாயகீம் என்பதனால் ஸ்காந்த புராணாந்தர்கத ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் கூறிய தடாதகையாக அம்பாள் அவதாரம் செய்து ஸுந்தரேசனை மணந்து கொண்டதையும் கூறுகிறார்.

Koviloor Digital Library

नानायोगिमुनीन्द्र हृत्सुवसतीं नानार्थसिद्धिप्रदां
नानापुष्पविराजिताङ्घ्रियुगलां नारायणेनार्चिताम् ।
नादब्रह्ममयीं परात्परतरां नानार्थतत्वात्मिकां
मीनाक्षीं प्रणतोऽस्मि सन्ततमहं कारुण्यवारांनिधिम् ॥

நாநாயோகி³ முனீந்³த்ர ஹ்ருத்ஸுவஸதீம் நாநார்த்த² ஸித்³தி⁴ ப்ரதா³ம்
நாநாபுஷ்ப விராஜிதாங்⁴க்ரியுகளாம் நாராயணேனார்ச்சிதாம் ।
நாத³ப்³ரம்ஹமயீம் பராத்பரதராம் நாநார்த்த² தத்வாத்மிகாம்
மீனாக்ஷீம் ப்ரணதோஸ்மி ஸந்ததமஹம் காருண்ய வாராம் நிதி⁴ம் ॥

பதவுரை: नानायोगि मुनीन्द्रहृत्सुवसतीं நாநாயோகி³ முனீந்த்³ரஹ்ருத்ஸுவஸதீம் — அநேக யோகிகளுடையவும் முனிவர்களுடையவும் இதயங்களில் நன்கு விளங்குபவளும் नानार्थसिद्धिप्रदां நாநார்த்த² ஸித்³தி⁴ ப்ரத³ாம் — அடியார்களுடைய) பல வகை விருப்பங்களுக்கும் பயனளிப்பவளும், नानापुष्पविराजिताङ्घ्रियुगलां நாநாபுஷ்ப விராஜிதாங்⁴ரியுக³ளாம் — பலவகை மலர்களின் காந்தியோடு விளங்கும் இரு திருவடிகளை உடையவளும், नारायणेनार्चितां நாராயணேனார்சிதாம் திருமாலால் வழிபடப்பட்டவளும், नादब्रह्ममयीं நாத³ப்³ரம்ம மயீம்— நாதப்ரம்ம மயமானவளும், परात्परतरां பராத்பரதராம்— உயர்ந்த பொருளுக்கும் உயர்ந்த பொருளாய் விளங்குபவளும், नानार्थतत्वात्मिकां

Koviloor Digital Library

நாநார்த்த² தத்வாத்மிகாம் — எல்லாப் பொருள்களின் தத்துவ சொரூபிணியும், காருண்யவாரிநிதிம் காருண்யவாராம் நிதி⁴ம்—கருணைக் கடலானவளுமான, मीनाक्षीं மீனாக்ஷீம் —மீனாக்ஷி தேவியை, अहं அஹம்—நான் सन्ततं ஸந்ததம்—எப்பொழுதும், प्रणतोऽस्मि ப்ரணதோஸ்மி — வணங்குகிறேன்.

பொழிப்புரை: அனேகம் யோகிகளுடையவும், முனிகளுடையவும் இதயங்களில் நன்கு விளங்குபவளும், அடியார்களுக்குப் பலவகை விருப்பங்களின் பயன்களை அளிப்பவளும், பன்மலர்களின் காந்தியோடு விளங்கும் இணைத் திருவடிகளை யுடையவளும், நாராயணனால் ஆராதிக்கப் பட்டவளும், நாதப்ரம்ம சொரூபிணியும், உயர்ந்தவைகளில் உயர்ந்தவளும், எல்லாவற்றின் உண்மைத் தத்துவத்தின் உருவமும், கருணைக் கடலானவளுமான மீனாக்ஷியை நான் என்றும் வணங்குகிறேன்.

ஸ்ரீ சங்கர பகவத் பாதர் அருளிய

ஸ்ரீ மீனாக்ஷி பஞ்ச ரத்னம் சம்பூர்ணம்

கோவிலூர் ஆதீனம்



4287
Q25

Printed at M. W. N. Press, Madras-5.

Koviloor Digital Library

Koviloor Digital Library



ஆசார்யாளின் ஆசியுடன் வெளிவந்துள்ள
இதர ஸ்தோத்ர நூல்கள்



கணேச பஞ்சரத்னம்

கனகதாரா ஸ்தோத்ரம்

மஹிஷாஸுரமர்த்தினி ஸ்துதி

ஆதித்ய ஹ்ருதயம்

கோவிந்தாஷ்டகம்